# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

<u>ஆணை நாள் - **03.06.2025**</u>

**<u>முன்னிலை</u>**

**திரு முகம்மது ஷகீல் அ்தர், இகாப (ஓய்வு)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 21225/SCIC/2023</u>**

திருமதி என்.சரோஜா க/பெ.நடராஜன் மேல்முறையீட்டாளர்
எண்.67/1,பெரியேரி கிராமம்,
தொரப்பாடி அஞ்சல் - 606 704
செங்கம் வட்டம்
திருவண்ணாமலை மாவட்டம்

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
சார்பதிவாளர் ....... பொது அதிகார அமைப்பு
சார்பதிவாளர் அலுவலகம்
செங்கம், திருவண்ணாமலை மாவட்டம்.

**<u>ஆணை</u>**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 26.09.2023 |
| 2. | முதல் மேல்முறையீட்டு மனு | 30.10.2023 |
| 3. | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 02.12.2023 |
| 4. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 13.11.2024 |
| 5. | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 30.12.2024 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / சார்பதிவாளர் அலுவலகம், செங்கம் திருவண்ணாமலை அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “பெரியேரி கிராம புல எண்கள் 44/2A, 44/2D, 45/2E, 45/2H & 45/21 அடங்கிய சொத்துக்கள் தொடர்பாக, செங்கம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவான பாக பிரிவினை 3658/2023 ஆவணத்தின் நகல் பிரதியை பெற்று தரக் கோரியும் மேற்படி ஆவணத்தை இரத்து செய்ய

கோரியும் அனுப்பிய பதிவஞ்சலில் 29/05/2023 அன்று செங்கம் சார்பதிவாளர் அவர்களால் பெறப்பட்டுள்ளது. மேற்படி மனு மீது எடுத்துள்ள முழு நடவடிக்கை மற்றும் அதன் கோப்பு எண். மேற்படி முழு கோப்பு நகல்கள் வேண்டும்" என்பன போன்று 11 (பதினொன்று) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

**2. இன்றைய (03/06/2025) விசாரணைக்கு மனுதாரருடன் அவரது மகன் திரு.அன்பரசன் என்பவரும் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு பொ.சிவசங்கரன், சார்பதிவாளர் (பொ), செங்கம் சார்பதிவகம் அவர்கள் ஆஜரானார். மனுதாரரின் 26/09/2023 தேதியிட்ட பிரிவு 6(1)-ன் கீழான மனுவிற்கு அப்போதைய (26/09/2023 தேதிய) பொதுத் தகவல் அலுவலர்/ சார்பதிவாளர் திரு.பால்வின் சிவராஜ் எவ்வித தகவலும் வழங்கவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, மேற்குறிப்பிட்ட திரு.பால்வின் சிவராஜ், மனுதாரருக்கு எவ்வித தகவலும் வழங்காததற்காக பிரிவு 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் பெற்று, அதனை 10/07/2025 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**

**3. இன்றைய விசாரணையின்போது, மனுதாரர் தனக்கு அளிக்கப்பட்ட 13/11/2024 தேதியிட்ட தகவலில், இனங்கள் 1,3,5,6,8,9,10 ஆகியவற்றிற்கான தகவல்கள் சரியானதாக இல்லை என்றார். ஆணையம் அவற்றை பரிசீலனை செய்கையில், இனம் 3-க்கான தகவலை ஆணையம், ஆவணங்களின்படியான உரிய தகவல் அனுப்பப்பட்டுள்ளதாகப் பதிவு செய்து ஏற்கிறது. மேலும், பொதுத் தகவல் அலுவலர் இனங்கள் 1, 5 மற்றும் 10 ஆகியவற்றிற்கான உரிய / திருத்திய தகவலை எவ்வித கட்டணமுமின்றி இலவசமாக மனுதாரருக்கு வழங்க வேண்டும். இனம் 6-க்கு நடவடிக்கை எடுத்த அறிக்கை மட்டும் (கோப்பு இல்லாமல்) மற்றும் இனம் 8-க்கு மொத்த மனுக்களின் எண்ணிக்கை மட்டும், இனம்-9-க்கு திருத்திய தகவல், ஆகியவற்றை, அதாவது, இனங்கள் 1,5, 6, 8, 9 மற்றும் 10-க்கான தகவல்களை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைப்பதோடு, அதன் பின்னர், மனுதாரருக்கு அனுப்பி வைத்த தகவலின் நகல், மனுதாரரிடமிருந்து பெறக் கூடிய அஞ்சல் ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் முன்னாள் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பெற்ற காரண விளக்கம் ஆகியவற்றை 10/07/2025 அன்று பிற்பகல் ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**

**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 21225/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

1.பொதுத் தகவல் அலுவலர்/
சார்பதிவாளர்
சார்பதிவாளர் அலுவலகம்
செங்கம், திருவண்ணாமலை மாவட்டம்.

2.திரு.பால்வின் சிவராஜ்
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/
சார்பதிவாளர் அலுவலகம்
**(தற்போது)**

**மேல்முறையீட்டாளர்**

திருமதி என்.சரோஜா க/பெ.நடராஜன்
எண்.67/1,பெரியேரி கிராமம்,
தொரப்பாடி அஞ்சல் - 606 704
செங்கம் வட்டம்
திருவண்ணாமலை மாவட்டம்

நகல்

1.பதிவுத்துறைத் தலைவர்
பதிவுததுறைத் தலைவர் அலுவலகம்
பட்டினப்பாக்கம், சென்னை-28

2.பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-35

RG/PC